மன்றத்தின் தீர்ப்பை அமல் நடத்தாமல் செய்வதற்கு இப்பொழுது இடம் இருக்கிறதா ? அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எ. பக்தவத்சலம்: சட்டத்தில் அதற்கு இடமில்லை. சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டால், அதற்குக் குறுக்கே அரசாங்கம் நிற்பதற்கில்லை.

* 44 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) The reasons for the Armed Police entering Kothari, Vasantha and Rajalaxmi Mills at Coimbatore on 8th November 1963 and resorting to lathi-charge on the workers;

(*b*) the number of workers who received injuries due to the lathi-charge;

(*c*) whether any enquiry was conducted on the Police excesses; and

(*d*) if so, the findings of the enquiry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) On 8th November 1963, the workers of the Vasantha and the Kothari Mills who resorted to a stay-in-strike demanding increased bonus surrounded the managerial staff of these mills without allowing them to move about. On written complaints from the managements of these mills, the Police intervened and chased away the workers and set free the managerial staff. There was however, no lathi-charge as alleged. The Police never entered the Rajalaxmi mills.

(*b*) *to* (*d*) : Do not arise.

Hindi Pandits

* 48 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI: Will the Hon. the Chief Minister be pleased to state whether the benefits of the G.O. Ms. No. 2640, Education, dated 25th October 1962, will be extended to the first grade Hindi Pandits who have passed B.A. and B.T. examinations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The matter is under the consideration of the Government.

திரு. செ. மாதவன்: இந்தி ஆசிரியர்களை ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வைக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால், அந்த இந்தி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தில் ஒரு பகுதி மத்திய அரசாங்கத்திலிருந்து நமது அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஹிந்திப் பண்டிதர்களுக்குத் தகுதியிருந்தால், தலைமை ஆசிரியர் பதவிக்குக் கருதப்படலாமா என்பதுதான் கேள்வி. எங்கெங்கே ஹிந்தி ஆசிரியர்களுக்குத்

தேவையிருக்கிறதோ, அங்கெல்லாம் ஹிந்தி ஆசிரியர்கள் வைக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். மத்திய அரசாங்கம் உதவி அளிக்கிறது.

ஆசிரியர்கள்

** 49 கேள்வி*—**திரு. செ. மாதவன்** (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இதற்குமுன் கேரள அரசாங்கத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஆசிரியர்களின் பணி சென்னை அரசாங்கத்தின்கீழ் முறைப்படுத்தப்பட்டுவிட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

The services of teachers who were working previously under the Travancore–Cochin State and who were allotted to this State have been regularised in the Madras Educational Subordinate Service.

பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள்

** 51 கேள்வி*—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நகரங்களில் வேலை பார்க்கும் ஸ்தல ஸ்தாபன ஊழிர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுப்பது போல கிராமப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கும் வீட்டுவாடகை அலவன்ஸ் கொடுக்கப்படாதது ஏன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The main criteria for sanctioning House Rent Allowance are population, availability of housing accommodation, levels of house-rent and the number of Government Offices located in the place. On the basis of the above criteria, places have been classified into three groups. Madras City and its suburbs have been included in Group I, mufassal municipalities with population exceeding 50,000 in Group II and all other Municipalities, taluk headquarters and certain specified places, in Group III. The rate of House Rent Allowance sanctioned are according to the Group under which a particular place falls. In accordance with this scheme, neither the Government nor the employee of panchayat unions stationed in villages are allowed House Rent Allowance.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் அமைந்து இருக்கக் கூடிய நகரங்கள் விரிவடைந்து வருகின்றன. ஏராளமான உத்தியோகஸ்தர்கள் இருக்கக்கூடிய நகரங்கள் இருப்பதால் அங்கெல்லாம் அவர்களுக்கு அலவன்ஸ் கொடுக்க, அந்த வாய்ப்பை அவர்களுக்கு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?